# ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி

## தாய்மொழி (தமிழ்) - தரம் 1

## 1.0 அறிமுகம்

தாய்மொழி - தமிழ்ப் பாடத்திற்கான விடயக்கூறுகள், அடிப்படை மொழித்திறன்களான செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய நான்கு பரப்புகளில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆயினும் இவை தனித்தனி விடயங்களாகக் கற்பிக்கப்படுதலாகாது. பொருத்தமாக அவற்றை ஒன்றிணைத்துக் கற்பித்தலே எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு விடயப் பரப்பிலுமுள்ள கூறுகளை ஆசிரியர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகவே அவை தனித்தனியாகத் தரப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் தேர்ச்சி அடிப்படையிலான அணுகுமுறையில் எழுத்தறிவு, தொடர்பாடல் தேர்ச்சிக்குரிய ஓர் அடிப்படைத் தேர்ச்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவதானித்துச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தூன்றி வாசித்தல், உறுப்பமையவும் செம்மையாகவும் எழுதுதல் மூலம் பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம், தொடர்பாடல் என்பவற்றின்பால் மாணவரை இட்டுச் செல்லல் இதில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி தொடர்பாடல் சாரந்த தேர்ச்சிகளோடு, சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள், வேலையுலகுக்கு ஆயத்தமாகும் தேர்ச்சிகள், ஒழுக்கம் மற்றும் சமயஞ் சார்ந்த தேர்ச்சிகள், ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல் மற்றும் விளையாட்டுச் சார்ந்த தேர்ச்சிகள், ஆளுமை வளர்ச்சி சார்ந்த தேர்ச்சிகள், கற்பதற்காகக் கற்றல் சார்ந்த தேர்ச்சிகள் ஆகிய தேர்ச்சிகள் யாவும் மாணவரிடத்தே விருத்தியடையும் வகையில் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டுத் திட்ட மிடப்படுதல் வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.0 ஆரம்பக்கல்விப் புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழிசார்ந்த தேர்ச்சிகள்

- ✓ இலகுவான பாடல்கள், சிறிய கதைகள் என்பவற்றைச் செவிமடுத்து இரசிப்பார்.
- ✓ இலகுவான அறிவுறுத்தல்கள், கட்டளைகள். அறிவித்தல்கள் என்பவற்றைச் செவிமடுத்துச் சிந்தித்துத் துலங்குவார்.
- ✓ தனது நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குக் கருத்துக்களைப் பரிமாறி நட்புறவுடன் பேசுவார்.
- ✓ தனக்குத் தெரிந்த பாடலைத் தாளலயத்துடன் பாடுவார்.
- ✓ சிறிய கதையொன்றை இரசனையுடன் கூறுவார்.
- ✓ வகுப்பறைக்கு உள்ளேயும் வெளியேயும் தகவலொன்றைப் பரிமாறுவார்.
- ✓ தான் பார்த்த, அல்லது கேட்ட நிகழ்வொன்றைத் தெளிவாகக் கூறுவார்.
- ✓ சபை முன்னே, ஒரு பொருள் பற்றிக் கூச்சமின்றிப் பேசுவார்.
- ✓ எழுத்துக்களை இனங்கண்டு, சரியாக உச்சரித்துப் பொருள் விளங்க வாக்கியங்களை வாசிப்பார்.
- ✓ நிறுத்தக்குறிகளை அனுசரித்துத் தொனிவேறுபாட்டுடன் இலகுவான வாக்கியங்கள் கொண்ட பந்தியை வாசிப்பார்.
- ✓ தனது தேவைக்காகப் பொது இடங்களிலுள்ள பெயர்ப்பலகைகளை வாசிப்பார்.
- ✓ சிறிய கதைகள், இலகுவான பாடல்கள் என்பவற்றை ஆர்வத்துடன் வாசித்து இரசிப்பார்.
- ✓ எழுத்துப் பொறிமுறைகளை (அளவு, அமைப்பு. திசைமுகம்) அனுசரித்து உறுப்பமைய எழுதுவார்.
- ✓ சொற்கள், தொடர்கள், சிறுவாக்கியங்கள் என்பவற்றைப் பார்த்தும், கேட்டும், சுயமாகவும் எழுதுவார்.
- ✓ தனது சுயவிபரங்களில் இலகுவான தகவல்களை எழுதுவார்.
- ✓ குறித்த ஒரு விடயம் பற்றிய இலகுவான வாக்கியங்கள் சிலவற்றை நிறுத்தக் குறிகளுடன் எழுதுவார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## தரம் ஒன்றிற்கான எதிர்பார்க்கும் தேர்ச்சிகள்

- ✓ சுற்றாடலில் உள்ள ஒலிகளைச் செவிமடுத்து ஒலித்துக் காட்டுவார்.
- ✓ சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- ✓ தொடர்பாடல் விருத்திக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ இரசனைக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ செவிமடுத்துக் கிரகித்துத் துலங்குவார்.
- ✓ நாளாந்தத் தேவைகளுக்காகப் பேசுவார்.
- ✓ கேட்டு, பார்த்துப் பேசுவார்/உரையாடுவார்.
- ✓ இரசனைக்காகவும் பேச்சு விருத்திக்காகவும் பாடி, பேசி, நடிப்பார்.
- ✓ எழுத்துக்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.
- ✓ சொற்கள், தொடர்களை வாசிப்பார்.
- ✓ சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- ✓ எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுவார்.
- ✓ சொற்களையும் சொற்றொடர்களையும் விளங்கி எழுதுவார்.
- ✓ பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்.

## 3.0 கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

தரம் ஒன்று மொழிப்பாடத்திற்கான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது, வழிப்படுத்திய விளையாட்டுக்கள் கூடுதலாகவும் செயற்பாடுகள் போதிய அளவிலும், எழுத்துப் பயிற்சிகள் குறைந்த அளவிலும் இடம்பெறச் செய்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் சிறுகுழுக்களாக, சோடிகளாக, பெரிய குழுக்களாக, வகுப்பு வாரியாக, வேண்டியவிடத்துத் தனித்தனியாகச் செயற்படுவதற்கும் இயங்குவதற்கும் ஏற்றவாறு செயற்பாடுகளைத் திட்டமிடுதல் வேண்டும்.

இவற்றோடு, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடும்போது பாடநூல்,செயல்நூல், ஏனைய வாசிப்பு நூல்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான பொருத்தமான சந்தர்ப்பங்களிலும் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வழிப்படுத்திய விளையாட்டுக்கள், செயற்பாடுகள், எழுத்து வேலைகள் தொடர்பான மாதிரிகளும் வழிகாட்டல்களும் இவ் வழிகாட்டியில் அடங்கியுள்ளன.

## 4.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தாய்மொழிப்பாட விருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உதவும் வகையில் பல வேலைத்திட்டங்கள் பாடசாலையில் நடைமுறையில் உள்ளன. அவற்றுள் சில வருமாறுளூ

- ✓ காலைக்கூட்டமும் நற்சிந்தனையும்
- ✓ வகுப்பு மன்றங்கள்
- ✓ கலை நிகழ்ச்சிகள்
- ✓ கண்காட்சிகள்
- ✓ சமய நிகழ்ச்சிகள்
- ✓ சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை, சுற்றுலா போன்றவை
- ✓ ஆசிரியர், பெற்றோர் தினம் ... போன்றவை

இவற்றை பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் பாடசாலைக் கொள்கையாக அமைதல் வேண்டும். பாடசாலைச் சமூகமும் சமுதாயமும் இதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும்.

## 5.0 கணிப்பீடு

**தரம் ஒன்றில் தாய்மொழிப்பாடத்தில் எழுத்துப் பரீட்சையை விட முறை சாராத கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.** அதாவது மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடும்போது அவர்களின் துலங்கல்களை அவதானித்து மேற்கொள்ளப்படுகின்ற கணிப்பீடுகளுக்கே முன்னுரிமை வழங்குதல் வேண்டும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் போது, குறிப்பாக வழிப்படுத்திய விளையாட்டுகள் (Guided Play) செயற்பாடுகள் என்பவற்றின் போது, அவதானித்தல் (Observation), உற்றுநோக்குதல் (Critical Observation) வாய்மொழி வினாக்கேட்டல் (Oral questioning) என்பவை மூலம் தரம் ஒன்று மாணவர்களுக்கான தேர்ச்சிகள் அடையப்படுகின்றனவா

அல்லது விருத்தி அடைகின்றனவா என்பதைத் தொடர்ச்சியாகக் கணிப்பீடு செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- ✓ வினாக்களுக்குச் சரியாக விடை கூறுதல்
- ✓ சரியாக உச்சரித்துப் பிழையின்றி வாசித்தல்
- ✓ விருப்புடன் பாடுதல் போன்றவை

கணிப்பீட்டிற்கான சுட்டிகளாகக் கொள்ளப்படலாம்.

சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் என்பவற்றை எழுதுவதற்கான செயற்பாடுகளின்போதும் கணிப்பீடு செய்யலாம் என்பதையும் கவனத்திற் கொள்க.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## பாடத்திட்டம் - தரம் ஒன்று

## தாய்மொழி - தமிழ்

### முன்மொழித் திறன் விருத்தி

**1. பார்வைப் பிரித்தறிகை**

- ✓ படங்களில்/உருக்களில் வேறுபட்டவற்றை இனங்காணல்.
- ✓ ஒத்த எழுத்துக்கள் கொண்ட எழுத்துத் தொகுதியில் வேறுபட்ட எழுத்தை இனங்காணல்.
- ✓ ஒரு சொற்றொகுதியில் வேறுபடும் சொல்லைக் கண்டறிதல்.

**2. கேட்டற் பிரித்தறிகை**

- ✓ சுற்றாடலிலுள்ள ஒலிகளைச் செவிமடுத்து வேறுபாடுகளை அறிதலும் ஒலித்துக் காட்டுதலும்.
- ✓ சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்காணல்.

**3. உள, உடல் இயக்கத்திறன் விருத்தி**

- ✓ கை, கண் இயைபாக்க விளையாட்டுக்களில் ஈடுபடுதல்.
- ✓ ஆக்கத்திறன் விருத்திக்கான செயற்பாடுகளில் ஈடுபடுதல்.
- ✓ வாசித்தலுக்கான கண் நகர்வுப் பயிற்சிகளைப் பயிலுதல்.
- ✓ எழுதுதலுக்கான தசைநார்ப் பயிற்சிகளில் ஈடுபடுதல்.

**4. வாசித்தலுக்கான முன்ஆயத்தம்**

- ✓ படங்களை வாசித்தல்.
- ✓ படங்களுடன் சொற்களை வாசித்தல்.
- ✓ படங்களின்றிச் சொற்களை வாசித்தல்.

**5. எழுதுதலுக்கான முன்ஆயத்தம்**

- ✓ சுயமாகக் கீறுதல், வரைதல், நிறந்தீட்டுதல்.
- ✓ புள்ளிக்கோடுகளை இணைத்துக் கீறுதல்.
- ✓ எழுத்துக்களுக்குரிய வளைகோடுகளை வரைதல்.
- ✓ எழுத்துருவை ஒத்த வடிவங்களை அமைத்தல்.
- ✓ எழுத்தின் மீது எழுதுதல், பார்த்து எழுதுதல்.
- ✓ சொற்களை வாசிப்பதன்மூலம் எழுத்துக்களில் பரிச்சயம் பெறுதல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# மொழித்திறன் விருத்தி

## 1.0 செவிமடுத்தல்

### 1.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறன் உள்ள கேட்போராகச் செயற்படுவார்.

1.1.1 சுற்றாடலில் உள்ள ஒலிகளைச் செவிமடுத்து ஒலித்துக் காட்டுவார்.
- ✓ பௌதிகப் பொருட்களின் ஒலிகள்
- ✓ பிராணிகளின் ஒலிகள்

1.1.2 சொற்களுக்கிடையில் வேறுபட்ட ஓசையுள்ள சொல்லை இனங்கண்டு வெளிப்படுத்துவார்.
- ✓ முதல் எழுத்து, இரண்டாம் எழுத்து, இறுதி எழுத்து மாறும் சொற்கள். (எழுத்துக்களின் எண்ணிக்கைக்கு வரையறையில்லை)

### 1.2 பல்வேறு சூழ்நிலைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வகையில் செவிமடுத்துத் துலங்குவார்.

1.2.1. தொடர்பாடல் விருத்திக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ சகபாடிகளுடன் உரையாடுதல்
- ✓ ஆசிரியர்களுடன் உரையாடுதல்

1.2.2. இரசனைக்காகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ சிறுவர் பாடல்கள்
- ✓ சிறுவர் கதைகள்
- ✓ சிறுவர் நாடகங்கள்

1.2.3. செவிமடுத்துக் கிரகித்துத் துலங்குவார்.
- ✓ கட்டளைகள்
- ✓ அறிவுறுத்தல்கள்
- ✓ செய்திகள், தகவல்கள்
- ✓ விடுகதைகள்
- ✓ புதிர்கள்

## 2.0 பேச்சு

### 2.1 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப செம்மையாகப் பேசுவார்/உரையாடுவார்.

2.1.1. நாளாந்தத் தேவைகளுக்காகப் பேசுவார்
- ✓ சேர்ந்து பேசி விளையாடுதல்
- ✓ நட்புறவு விருத்திக்கான உரையாடுதல்
- ✓ எண்ணங்களையும் தேவைகளையும் வெளிப்படுத்துதல்
- ✓ வினாக்களை வினாவுதல், விடையளித்தல்
- ✓ தகவல்களைப் பரிமாறுதல்
- ✓ கட்டளைகள், அறிவுறுத்தல்கள், செய்திகள், தகவல்கள்
- ✓ விடுகதைகள், புதிர்கள்
- ✓ விந்தைச் செய்திகள்

2.1.2. கேட்டும், பார்த்தும் பொருத்தமாகப் பேசுவார்/உரையாடுவார்
- ✓ படத்தைப் பார்த்து அது பற்றி உரையாடுதல்
- ✓ படத்தைப் பார்த்துக் கதை கூறுதல்
- ✓ அனுபவங்களை வெளிப்படுத்துதல்
- ✓ தகவல்களை அறிந்தும் சேகரித்தும் பேசுதல்

2.1.3. இரசனைக்காகவும் பேச்சு விருத்திக்காகவும் பாடி, பேசி, நடிப்பார்
- ✓ சிறுவர்களுக்கான பாடல்கள்
- ✓ சிறுவர்களுக்கான கதைகள்
- ✓ சிறுவர்களுக்கான நாடகங்கள்
- ✓ பாவனை செய்து பேசுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# 3.0 வாசிப்பு

## 3.1 எழுத்துக்களை இனங்கண்டு சரியான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார்.

3.1.1. எழுத்துக்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.
- ✓ படத்தைப் பார்த்து பெயரைக் கூறுதல்
- ✓ படங்களின்றி பெயர்களை வாசித்தல்
- ✓ சொற்களை வாசிப்பதன் மூலம் எழுத்துக்களை இனங்காணல்
- ✓ உயிர்க்குறிகளை அனுசரித்து எழுத்துக்களை இனங்காணல்
- ✓ வரியெழுத்துக்குரிய ஒலிவடிவங்களை இனங்கண்டு சேர்த்து உச்சரித்தல்
- ✓ எழுத்தொலிகளை ஒன்று கூட்டி சொற்களை/தொடர்களை/ வாக்கியங்களை வாசித்தல்

3.1.2 சொற்கள், தொடர்களை வாசிப்பார்.
- ✓ நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசித்தல்
- ✓ சொற்களை வாசித்தல்
- ✓ சொற்றொடர்களை வாசித்தல்
- ✓ வாக்கியங்களை வாசித்தல்

3.1.3 சொற்களஞ்சியத்தை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- ✓ சொற்கள்
- ✓ சொற்றொடர்கள்
- ✓ பெயர்ப்பலகைகள்
- ✓ பொருட்களின் பெயர்கள்
- ✓ சுவரொட்டிகள்
- ✓ உறவுப் பெயர்கள்
- ✓ சிறுவர்களுக்கான பெரிய எழுத்து சித்திரக் கதைகள்
- ✓ சிறுவர்களுக்கான கருத்துப்படக் கதைகள்
- ✓ தனது பெயர், நண்பர்களின் பெயர்கள்
- ✓ பாடசாலையின் பெயர், ஊரின் பெயர்

# 4.0 எழுத்து

## 4.1 நுட்பங்களையும், முறைகளையும் அனுசரித்து எழுதும் திறனை விருத்தி செய்வார்.

4.1.1. எழுத்துப் பொறிமுறையை அனுசரித்து எழுதுவார்.
- ✓ அளவு, அமைப்பு, திசைமுகம், உறுப்பு நேர்த்தி, முழுமை
- ✓ நிறுத்தக் குறிகள் (முற்றுப் புள்ளி, வினாக்குறி).
- ✓ தனி எழுத்துக்கள், உயிர்க்குறிகளுடனான எழுத்துக்கள்
- ✓ நெடுங்கணக்கின் தொடரொழுங்கில் அடுத்து வரும் எழுத்துக்கள்

4.1.2 சொற்களையும் சொற்றொடர்களையும் விளங்கி எழுதுவார்
- ✓ படத்தைப் பார்த்து அதில் உள்ளவற்றின் பெயர்களை எழுதுதல்
- ✓ இடைவெளிகளைப் பூர்த்தி செய்து எழுதுதல்
- ✓ சொல்வதெழுதுதல்
- ✓ எழுத்துக்களைக் கொண்டு, சொற்களை ஆக்கி எழுதுதல்
- ✓ சிறிய வாக்கியங்களை எழுதுதல்

4.1.3 பல்வேறு நோக்கங்களுக்காக எழுதுவார்
- ✓ தனது பெயர், நண்பர்களின் பெயர்கள்
- ✓ பாடசாலையின் பெயர், ஊரின் பெயர்
- ✓ எளிமையான செய்திகள், கூற்றுக்கள்
- ✓ தன்னைப் பற்றி எழுதுதல்
- ✓ தான் அறிந்தவை பற்றி எழுதுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

# சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் கூறு, மனிதன் மீதும் மனிதசமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்து கின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படை யாகக் கொண்டு நிகழவேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப் படுத்துகிறது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்பால் ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்ளுகிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கை விருத்திசெய்வதே ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பப்படும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமையுடைய ஒருவரிடத்தே எழுத்தறிவு, கணித அறிவு, சமயம் தொடர்பான தேர்ச்சிகளோடு மேலும் பல துறைகளுக்குரிய தேர்ச்சிகளும் விருத்தியடைதல் வேண்டும். கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விப் இக்கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்களின் கீழ் அத்தேர்ச்சிகளை அடைவதற்கான சந்தர்ப்பங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆனால் புதிய கலைத்திட்டத்தில் ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது.

முதன்மை நிலை ஒன்றில் 16 கருப்பொருள்களை மையமாகக்கொண்டு, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் என்ற பாடத்தின் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அழகியல், ஆக்கம், உடற்கல்வி ஆகிய துறைகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதோடு, சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களை வளப்படுத்துவதற்கும் சுற்றாடல் தொடர்பான செயற்பாடுகளைப் பயன்படுத்தலாம். தரம் ஒன்றில் பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளினூடாக வெளிக்கொணரலாம். இப்பாடத்திற்குரிய செயற்பாடுகளை ஒழுங்கு செய்யும்போது ஆசிரியருக்குத் துணையாக, உதவி புரிவோர் இருப்பாரெனின் அவற்றை ஒழுங்கமைத்தல் இலகுவாக அமையும். அப்பாடசாலையிலேயே தரம் 6இல் கல்வி பயிலும் பிள்ளைகளின் உதவியை இதற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும் என்பதில்லை. இப்பருவப் பிள்ளைகளின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ்வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவு செய்யும்போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.**

**எனவே, ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் தரப்பட்டுள்ள அந்தந்தக் கருப்பொருளினூடாகக் குறித்த தேர்ச்சிகளை அடைவதற்காக, உத்தேச செயற்பாடுகளுக்குப் பதிலாக வேறு செயற்பாடுகளை நீங்கள் ஆக்கிக் கொள்ளலாம். குறித்த தேர்ச்சிகளை அடையத்தக்கவாறாகச் செயற்பாடுகளை திட்டமிட்டு ஆக்கிக்கொள்வது தொடர்பாக ஆசிரியர்கள் கரிசனை காட்டுதல் வேண்டும்.**

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையிலான இக்கற்றல் பரப்பினூடாக மாணவரிடத்தே பின்வரும் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்க எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக்கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.
- ✓ அழகானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார்.
- ✓ மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார்.
- ✓ சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினை கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலையுலகிற்கு தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்கா தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துவார்.

## 03. முதன்மை நிலை ஒன்றில் ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' பாடத்துக்குரிய கற்றல் தேர்ச்சிகள்

- ✓ பாடசாலைச் சூழலுடன் இசைவடைந்து செயற்படுவார்.
- ✓ வீட்டில் மகிழ்ச்சியுடனும், பயனுறுதியுடைய வகையிலும் ஆட்களுடன் இடைத்தொடர்பு கொள்வார்.
- ✓ தகவல்களைச் சேகரிப்பதற்காக அவதானிப்பார்.
- ✓ அனுபவங்களினூடாக இலகுவான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ பழக்க வழக்கங்களை அனுசரித்துச் செயற்படுவார்.
- ✓ பாடசாலையுடன் தொடர்புடைய கடந்தகாலத் தகவல்களைத் தேடியறிவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்வுக்காக, நற்பழக்கங்களைப் பின்பற்றுவார்.
- ✓ நட்புடன் உரையாடி, தகவல்களைச் சரியாகப் பரிமாறுவார்.
- ✓ அயற்சூழலில் நிகழும் மாற்றங்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தம்மையும் தமது அயற்சூழலையும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணுவதில் பங்களிப்பார்.
- ✓ ஏனையோர் விரும்பத்தக்க வகையில் தமது நடத்தைகளைப் பேணிவருவார்.
- ✓ அடிப்படை மெய்ந்நிலைகளைப் பேணிவருவார்.
- ✓ அன்றாட வேலைகளின் போது தமது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெளியைப் பொருத்தமானவாறு பயன்படுத்தி, விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- ✓ குறித்த நோக்கங்களைக் கொண்ட வேலைகளில் கூட்டாகவும் பொறுப்புடனும் ஈடுபடுவார்.
- ✓ சுற்றாடற் பல்வகைமை குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில் ஏனையோருக்கு உதவ முன்வருவார்.
- ✓ காட்சிப் பலகைகளில், படங்கள், குறியீடுகள், மற்றும் எழுத்து மூலம்காட்டப்பட்டுள்ள தகவல்களைப் பெறுவார்.
- ✓ தமது அனுபவங்களைச் சித்திரங்களாகவும் உருவ ஆக்கங்களாகவும் வெளியிடுவார்.
- ✓ சுற்றாடலில் உள்ள ஒலிகள், ஓசைகள், அசைவுகளையும், அவற்றுக்குரிய பாத்திரங்களையும் போலச் செய்து காட்டுவார்.
- ✓ அபிநயம் செய்து ஆடிப்பாடுவார்.
- ✓ வெவ்வேறு வேலைகளின்போது இயைபாக்கத்துடன் உடலை அசைப்பார்.
- ✓ பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்களை உருவாக்குவார்.
- ✓ பெற்ற அனுபவங்களையும், சேகரித்த தகவல்களையும் தனியாகவோ, கூட்டாகவோ ஒரு தொகுதியினர் முன்னிலையில் சமர்ப்பிப்பார்.
- ✓ வீட்டிலும் பாடசாலையிலும் தமது கடமைகள், பொறுப்புக்கள் குறித்து உறுத்துணர்வுடன் செயற்படுவார்.

## 04. ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' என்ற பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிப்படுத்தல்

- ✓ இப்பாடத்திட்டத்தில் பிள்ளையின் சுற்றாடல் 16 கருப்பொருள்கள் வாயிலாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ✓ சகலவற்றையும் திருப்திகரமான அனுபவங்களாகப் பெற்றுக் கொள்வதற்குப் பிள்ளைகளுக்கு இடமளிக்க வேண்டும். அதற்குப் போதியளவு திட்டமிடலும் ஆயத்தமும் அவசியமாகும்.
- ✓ இங்கு தரப்பட்டுள்ள கருத்துகளுக்கேற்ப அறிமுக முறைகளையும், கற்றல் முறைகளையும் பிரயோகித்துப் பாடங்கள் திட்டமிடப்படல் வேண்டும்.
- ✓ தகவல்களைத் தேடியறிதலும் தகவல்களை அறிக்கைப்படுத்தலும் முக்கியமானவையாகும். ஆரம்பக் கட்டத்தில் வாய்மொழியாகவும் பருமட்டான படங்கள் மூலமும் தமது அனுபவங்களை வெளிப்படுத்துவதற்குப் பிள்ளைகளை ஊக்குக. படிப்படியாக, சொற்களையும், வாக்கியங்களையும் ஓரளவு விளக்கமான படங்களை யும் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளை வழிப்படுத்துக.
- ✓ சகல, வேலைகளையும் முயற்சிகளையும் மதிக்க வேண்டும்.
- ✓ பிள்ளைகளைக் குழுக்களாக வேலைகளில் ஈடுபடுத்தவும். எனினும் ஆரம்பச் சந்தர்ப்பங்களில் குழுவில் செயலாற்ற வேண்டிய முறை தொடர்பாகப் பிள்ளைகளுக்கு வழிகாட்டுதலும் உதவி புரிதலும் அவசியமாகக் கூடும்.
- ✓ ஏதேனும் கருப்பொருள் தொடர்பாகக் கற்றல் - கற்பித்தல் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது படிப்படியாகக் குவியும் தகவல்களையும் பொருள்களையும் (படிப்படியாகக் கட்டியெழுப்பப்படும்) ஒரு கண்காட்சியாக மாற்றுக.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

✓ குறித்தவோர் ஒழுங்கில் கருப்பொருள்கள் முன்வைக்கப்படவில்லை. எந்தவொரு நேரத்திற்கும் பொருத்தமான கருப்பொருளை எந்த இடத்திலிருந்தும் தெரிவுசெய்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரமுண்டு. காலத்திற்குப் பொருத்தமானவாறு கருப்பொருள்களைத் தெரிவுசெய்வதனால் வளங்களைப் பயன்படுத்துதல் மிக இலகுவாக அமையும்.

**05. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். முழு வகுப்பையுமோ குழுக்களையோ தனித்தனி மாணவரையோ கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் முன்கூட்டியே இதற்காக ஆயத்தங்களைச் செய்துகொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.

மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள். கையாண்டு பார்த்தல், குறுஞ்செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்கள், நூல்கள், அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

## 06. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தரம் ஒன்றில் ஷஷசுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' பாடத்தில் நாள் முழுவதும் மேசைக்கருகில், கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக பல்வேறு மெய்ந்நிலைகளிலும் மகிழ்ச்சியுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைக் காணக்கூடியவாறாகவே பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டங்களும் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும்.

- ✓ பாடசாலை நேரத்தினுள், தரம் ஒன்றில் கற்கும் பிள்ளைகள், பிரதானமாக விளையாட்டுடன் கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுற்றாடலை ஒழுங்கு செய்தல்.
- ✓ திறந்த வெளியில் கற்பதற்கான வாய்ப்பு வசதிகளை வழங்குதல்.
- ✓ பாடசாலையின் விளையாட்டுக்கள் அழகியற் செயற்பாடுகள், வேறு இணைப்பாட நடவடிக்கை களின்போது தரம் ஒன்றின் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்தல்.
- ✓ தேவையான சந்தர்ப்பங்களில், பாடசாலையில் மேல் வகுப்புக்களில் (தரம் 5,6இல்) உள்ள பிள்ளைகளின் உதவியையும் பெற்றுக் கொடுத்தல்.

## 07. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

மாணவரது கற்றல் - கற்பித்தல் பணிகளை ஒழுங்குசெய்யும்போது, அவர்கள் கற்றல் தொடர்பாக வெளிக்காட்டும் ஆற்றல்கள், ஆற்றலின்மைகள் பற்றிய சிறப்பான விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றிருத்தல் வேண்டும். இதற்காக வகுப்பறையில் இடையறாது நடத்தப்படும் தகவல் சேகரிப்புச் செயன்முறையே ஷஷகணிப்பீடு'' என்பதால் கருதப்படுகின்றது. மாணவரைக் கணிப்பிடுவதன் நோக்கங்கள் பலவாகும். எனினும் ஆரம்பத் தரங்களில் நடத்தப்படும் கணிப்பீடானது பிரதானமான இரண்டு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவற்றுள் ஒன்று கண்டறிதலாகும். தமது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் மாணவிக்கும் அவரவருக்குப் பொருத்தமானவாறு கல்வியை வழங்குவதாயின் ஆசிரியர், ஒவ்வொரு மாணவன்/மாணவி தொடர்பாகவும் தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் வெண்டும். கண்டறிந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு மாணவனுக்கும்/மாணவிக்கும் போதனை சார்ந்த பின்னூட்டலை வழங்குவதே இரண்டாவது நோக்கமாகும். எனவே ஆரம்பத் தரங்களில் நடைமுறைப் படுத்தப்படும் கணிப்பீடானது, மாணவரைத் தர வரிசைப்படுத்தல், ஒரு மாணவனை மற்றொருவருடன் ஒப்பிட்டு மதித்தல், மாணவரை அவர்களது ஆற்றல்களின்படி வகைப்படுத்தல் போன்றவற்றுக்கு அப்பாற்பட்ட ஒன்று எனக் கருதலாம்.

ஆரம்பத் தரங்களில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டை ஆசிரியரால் நடத்தப்படுகின்ற நியதி சார்ந்த, முறைசாராத தொடர்ச்சியான ஒரு கணிப்பீடு எனக் குறிப்பிடலாம். கலைத்திட்டத்தின் உத்தேச தேர்ச்சிகளுக்கு அமைய உருவாக்கப்பட்ட மதிப்பீட்டுப் பிரமாணங்கள், ஆசிரியர் வழிகாட்டியில் அடக்கப்பட்டுள்ளன. மாணவர் இப் பிரமாணங் களை எந்த அளவுக்கு எட்டியுள்ளார் என்பதைக் கணிப்பீட்டினூடாக ஆசிரியர்கள் கண்டறிதல் வேண்டும்.

வினாக்கள் கேட்டல், முறைசாராத வகையில் மாணவரை அவதானித்தல், அவர்களுடன் கலந்துரையாடல், செயல் அடைவுக்கோவைகளைப் பேணிவருதல், வீட்டு வேலைகளை மதிப்பிடல் போன்ற முறைசாரா உத்திகளையும் பயன்படுத்தலாம். அவற்றைப் பொருத்த மானவாறு பயன்படுத்துதல் குறிப்பாக ஆரம்பத் தரங்களில் வகுப்பாசிரியரின் பொறுப்பாகும். அலகு இறுதியிலோ தவணை இறுதியிலோ அன்றி, கற்பித்தற் பணிகள் நிகழும் வேளையிலேயே கணிப்பீட்டை நடத்துதல் வேண்டும். கல்வியை மேலும் சிறப்பாக மாணவர்க்கு வழங்குவதற்காக, ஒவ்வொரு மாணவனையும்/மாணவியையும் நன்கு இனங்காணத்தக்க ஒரு செயன்முறையே கணிப்பீடு என்பதை ஆசிரியர் விளங்கிக்கொள்ள வேண்டும்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 1.0 நாமும் பாடசாலையும்

### தேர்ச்சிகள்

- ✓ பாடசாலையினுள் தன்னுடன் நெருங்கிச் செயற்படுவோரின் வெவ்வேறு வகிபங்குகளை இனங்கண்டு செயற்படுவார்.
- ✓ பாடசாலையில் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்குக்கட்டுப்பட்டு ஒழுகுவார்.
- ✓ பாடசாலைக் கலாசாரத்திற்கு இசைவாகச் செயற்படுவார்.
- ✓ பாடசாலைச் சூழலின் அமைப்பை இனங்காண்பதற்காக ஆய்ந்தறிவார்.
- ✓ பாடசாலையிலுள்ள ஏனையோர் தொடர்பாக பரிவுணர்வுடன் செயற்படுவார்.
- ✓ பாடசாலை தனக்குப் பாதுகாப்பான ஓர் இடம் எனும் உணர்வுடன் செயற்படுவார்.
- ✓ வகுப்பறையை அழகாகவும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பேணுவதில் பங்கேற்பார்.
- ✓ விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி சுதந்திரமான அசைவுச் செயற்பாடு களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பாடசாலையின் பெயர், வகுப்பாசிரியை, அதிபர் தொடர்பான தகவல்கள்
- ✓ பாடசாலையின் பல்வேறு இடங்கள் பற்றிய தகவல்கள்
- ✓ இப்பாடசாலையில் கல்வி கற்கும் தனது மூத்த சகோதர சகோதரிகளும் தனக்கு நன்கு தெரிந்த மாணவர்களும் இருக்கும் இடங்கள்
- ✓ பாடசாலையில் நடைமுறையிலுள்ள பொது ஒழுங்குவிதிகளும் வழக்கங்களும்
- ✓ வகுப்பறையின் உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் அழகாகவும் பேணுவதற்கு நிறைவேற்ற வேண்டிய பணிகள்
- ✓ சிறுவர் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தலும் விளையாட்டு முற்றத்தைப் பயன் படுத்திச் சுதந்திரமான அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடலும்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ அழகியல் அம்சங்கள் கொண்ட சிறிய விழாவினை ஒழுங்கு செய்தல். இதற்கு தரம் 6 அல்லது தரம் 5 மாணவர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்ளலும் அவர்களது திறன்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் கொடுத்தலும். வகுப்பாசிரியரையும் அதிபரையும், அதிபரது அலுவலகம் அமைந்துள்ள இடத்தையும் அறிந்து கொள்ளல்
- ✓ பாடசாலை வளவைச் சுற்றிப்பார்த்து, வெவ்வேறு இடங்களை இனங்காணச் செய்தல். விளையாட்டு முற்றத்தை அவதானித்து, உபகரணங்களைப் பயன் படுத்தி விளையாடச் சந்தர்ப்பம் வழங்குதல் (ஆபத்துக்கள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள் குறித்துக் கவனம் செலுத்துதல்.) மூத்தசகோதர சகோதரிகள் இருக்கும் இடங்களை அவதானித்தல்
- ✓ வகுப்பறையைச் சுத்திகரித்தல். அலங்கரிப்பதற்கான பல்வேறு ஆக்கங்கள் செய்தல்
- ✓ அழகுபடுத்தல், சுத்தப்படுத்தல் தொடர்பான பாடல்களைப் பாடுதல், ஆடுதல், அவை பற்றிய கதைகளைக் கூறல்
- ✓ விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்தி சுதந்திரமான அசைவுச் செயற்பாடு களில் ஈடுபடல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 2.0 எமது வீடு

### தேர்ச்சிகள்

- ✓ வீட்டு அங்கத்தவர்கள் செய்யும் வேலைகளை மதித்து பயனுறுதிமிக்க வகையில் அவர்களுடன் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ குடும்ப அங்கத்தவர்களின் வகிபாகங்களை வெவ்வேறு முறைகளில் முன்வைப்பார்.
- ✓ வெவ்வேறு வகிபாகங்களுக்குப் பொருத்தமாக விருந்தினரை உபசரிப்பார்.
- ✓ வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகள் தொடர்பாக பரிவுணர்வுடன் செயற்படுவார்.
- ✓ பிராணிகளினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்புப் பெறத்தக்க வாறு செயற்படுவார்.
- ✓ வீட்டில் விளையாடப்படுகின்ற சில சிறுவர் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ தமது வீட்டில் வசிப்போர் பற்றிய விபரங்கள்
- ✓ வீட்டுக்கு வருகை தரும் உறவினர்கள், நண்பர்கள் பற்றி விபரங்கள்
- ✓ வீட்டிலுள்ளவையும் அவற்றால் பெறக்கூடிய பயன்களும்
- ✓ வீட்டுக்குத் தேவையானவற்றை வழங்குவோர்
- ✓ வீட்டில் செய்யப்படும் பல்வேறு வேலைகளும் அவற்றுள் தன்னால் செய்யக் கூடிய வேலைகளும்
- ✓ குடும்பத்தினரின் வெவ்வேறு வகிபங்குகளை நடித்துக் காண்பித்தல்
- ✓ செல்லப் பிராணிகளும் அவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும் பாதுகாப்புப் பெறும் விதமும்
- ✓ வீட்டில் விளையாடப்படுகின்ற விளையாட்டுக்கள்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ வீட்டு அங்கத்தவர்கள், வீட்டில் செய்யப்படும் அடிப்படை வேலைகள் என்பன பற்றிக் கலந்துரையாடுதலும் அவ்வேலைகளைப் போலச் செய்துகாட்டச் செய்தலும்
- ✓ வீட்டில் இடம்பெறும் வேலைகள் தொடர்பாக விளையாட்டு வீட்டினூடாக அனுபவம் பெறச் செய்தலும் போலச் செய்துகாட்டச் செய்தலும்
- ✓ வீட்டில் விளையாடப்படும் சில விளையாட்டுக்களிலீடுபட வாய்ப்பேற்படுத்தல்
- ✓ வீட்டில் நடைபெறும் வேலைகளைப் பற்றியும் வீட்டிலுள்ளோர் பற்றியும் பாடல்களை பாடவும் நடித்துக் காட்டவும் சந்தர்ப்பம் வழங்குதல்
- ✓ வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளை இனங்காணலும், பிராணிகளைப் போன்று செய்துகாட்டலும்.
- ✓ வீட்டில் உள்ள முக்கிய இடங்கள், அங்கு வைக்கப்பட்டுள்ள பொருள்கள் பற்றிக் கலந்துரையாடுதல்
- ✓ உபகரணங்கள் பற்றியும், அவற்றின் உபயோகங்கள் பற்றியும் பாடல்களைப் பாடுதலும் நடித்துக் காட்டுதலும்
- ✓ எளிமையான சில உபகரணங்களைக் கையாளச் சந்தர்ப்பம் வழங்கல் அவற்றால் ஆபத்துக்கள் ஏற்படாதவாறு கையாள்வது பற்றி அறிந்து கொள்ளச் செய்தல்
- ✓ வீட்டின் பாதுகாப்பு, அலங்காரம், சுத்தம் ஆகியன பற்றிய ஆக்கங்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடச் செய்தல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 3.0 தோட்டத்துக்கு வரும் பிராணிகள்

### தேர்ச்சிகள்

- ✓ பாடசாலைத் தோட்டத்திற்கு வரும் பிராணிகளை அவதானித்து அறிக்கைப் படுத்துவார்.
- ✓ பிராணிகளை வகைப்படுத்துவார்.
- ✓ அசைவுச் செயற்பாடுகளினூடாக பிராணிகளின் நடத்தைகளை எடுத்துக் காட்டுவார்.
- ✓ பல்வேறு பொருள்களால் பிராணிகளின் மாதிரியுருக்களை ஆக்குவார்.
- ✓ பிராணிகள் பற்றிய பாடல்களைப் பாடுவதிலும், பாடலுக்கேற்ப ஆடுவதிலும் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பிராணிகள் தொடர்பாகப் பரிவுணர்வு காட்டுவார்.
- ✓ பிராணிகளைப் பாத்திரங்களாகக் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ தோட்டத்திற்கு வரும் பிராணிகள் (பறவைகள், பூச்சிகள் போன்றவை) பற்றிய தகவல்கள்
- ✓ பிராணிகள் உண்ணும் உணவுகள்
- ✓ பிராணிகளின் சிறப்பான நடத்தைக் கோலங்களும், அவற்றைச் செய்து காட்டுதலும், பிராணிகளின் நடத்தைகள் தொடர்பான விளையாட்டுக்களும்
- ✓ பிராணிகளும் சூழலின் ஒரு பகுதி என மதித்துச் செயற்படல்
- ✓ பிராணிகளின் மாதிரியுருக்களை ஆக்குதலும், பிராணி முகமூடிகளை ஆக்குதலும்
- ✓ பிராணிகள் தொடர்பான பாடல்களைப் பாடுதலும் அசைந்தாடுதலும்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ சூழலில் காணப்படுகின்ற பிராணிகளை வெவ்வேறு இயல்புகளுக்கேற்ப வகைப்படுத்தல்
- ✓ பாடசாலைத் தோட்டத்தில் காணக்கூடிய பிராணிகளை அவதானித்தல், அவற்றுள் சில பிராணிகள் பற்றிய விசேட தகவல்களைப் பெறுதல். வெவ்வேறு விதத்தில் அவற்றை அறிக்கைப்படுத்தல்
- ✓ பிராணிகளைப் போன்று செய்து காட்டுதல், பிராணிகளின் மாதிரி உருக்களை ஆக்குதல், பிராணி முகமூடிகளை செய்தல், பாடல்களைப் பாடி மகிழ்தல்
- ✓ பிராணிகளுக்கு உதவும் நற்பண்பை வெளிப்படுத்தக்கூடிய குறு நாடகங்களை நடித்தலும், நடனமாடுதலும்
- ✓ பிராணிகளின் நடத்தைகள் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடல்

## கருப்பொருள் : 4.0 நீருடன் விளையாட்டு

### தேர்ச்சிகள்

- ✓ நீருக்கும் பொருள்களுக்கும் இடையிலான நடத்தைகளைப் பல்வேறு விதமாகக் கையாண்டு அனுபவம் பெறுவார்.
- ✓ நீரினை ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குக் கொண்டு செல்லும் முறைகளைக் கையாண்டு பார்ப்பார்.
- ✓ நீரின் துணையுடன் பல்வேறு ஆக்கங்களைப் புரிவார்.
- ✓ பல்வேறு செயற்பாடுகளின்போது நீரினைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- ✓ நீரினைத் தொடர்புபடுத்தி பல்வேறு விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## உள்ளடக்கம்

- ✓ பல்வேறு பொருட்கள் நீருடன் காட்டும் நடத்தைகள் (மிதத்தல், அமிழ்தல், நீரில் மறைந்து போதல்)
- ✓ பொருட்கள் நீரில் செயற்படும் விதத்தை மாற்றக்கூடிய முறைகள் (**எடுத்துக்காட்டு:** மிதப்பவற்றை அமிழச் செய்தல். அமிழும் சில பொருட்களை மிதக்கச் செய்தல்)
- ✓ நீரை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லும் வெவ்வேறு முறைகள்
- ✓ நீரினால் ஏற்படக்கூடிய விபத்துக்கள்
- ✓ நீருடன் தொடர்புடைய ஆக்கங்கள்
- ✓ நீரைத் தொடர்புபடுத்தி ஈடுபடக்கூடிய விளையாட்டுக்கள்
- ✓ நீரினால் கிடைக்கும் பயன்கள்
- ✓ நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ நீருடன் பல்வேறு பொருட்கள் செயற்படும் விதத்தை அவதானிப்பதற்காக செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ✓ ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு நீரை எடுத்துச் செல்லும் முறைகளைக் கையாண்டு பார்த்தல்
- ✓ செயல் முறையிலான செயற்பாடுகள் ஊடாக, நீரிலிருந்து நாம் பெறும் பயன்கள் மற்றும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டிய விதம் தொடர் பான அனுபவங்களைப் பெறல்
- ✓ நீரினால் ஏற்படக்கூடிய விபத்துக்கள் தொடர்பாகக் கலந்துரையாடல், கண்காட்சிகளினூடாக அறிவூட்டம் பெறல்
- ✓ நீரின் உதவியுடன் பல்வேறு ஆக்கங்களைச் செய்தல்
- ✓ நீருடன் தொடர்புடைய கதைகள், பாடல்கள், நடனங்கள் போன்றவற்றை முன்வைத்தல்
- ✓ நீரைப் பயன்படுத்தி சில விளையாட்டுக்களிலீடுபடல்

## கருப்பொருள் : 5.0 புத்தாண்டுக் காலம்

## தேர்ச்சிகள்

- ✓ புத்தாண்டுக் காலத்தில் சுற்றுப் புறத்தில் ஏற்படும் மாற்றங்களை மகிழ்ச்சியுடன் கூறுவார்.
- ✓ புத்தாண்டுப் பாரம்பரியங்களில் மகிழ்ச்சியுடன் பங்குகொள்வார்.
- ✓ புத்தாண்டுக் கொண்டாட்டங்களுடன் தொடர்புடைய விளையாட்டுக்களிலீடு படுவார்.
- ✓ புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் கிராமியப் பாடல்கள், பாடல்கள் போன்ற வற்றைப்பாடுவார்ளூ ஆடுவார்.
- ✓ புத்தாண்டுக் காலத்தில் பெற்ற அனுபவங்களை வெவ்வேறு ஊடகங்களினூடாக ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.

## உள்ளடக்கம்

- ✓ புத்தாண்டுக் காலத்தில் வீட்டிலும் சுற்றுப்புறத்திலும் ஏற்படும் மாற்றங்கள்
- ✓ புத்தாண்டுடன் தொடர்புடைய பாரம்பரியங்கள்
- ✓ புத்தாண்டு விளையாட்டுக்கள்
- ✓ புத்தாண்டு தொடர்பான பாடல்கள்
- ✓ புத்தாண்டிற்குத் தயாரிக்கும் பலகாரங்களின் மாதிரிகள்
- ✓ புத்தாண்டுடன் தொடர்புடைய அனுபவங்களை முன்வைத்தலும் நடித்துக் காட்டலும்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ புத்தாண்டுக் காலத்தில் வீடுகளிலும் சுற்றுப் புறங்களிலும் காணக்கூடிய மாற்றங்களைப் பற்றிய தமது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்காக கலந்துரையாடலிலீடுபடல்
- ✓ விளையாட்டு வீடுகளின் ஊடாக பண்டிகைக்கால பாரம்பரியங்கள், பழக்க வழக்கங்கள் பற்றிய செயன்முறையான அனுபவங்களைப் பெறுதல்
- ✓ புத்தாண்டுக் காலத்துக்குரிய விசேட விளையாட்டுக்களில் ஈடுபடல்
- ✓ புத்தாண்டுப் பண்டிகையுடன் தொடர்புடைய பாடல், நாட்டுப் பாடல் போன்ற வற்றை பாடுவதற்கும், ஆடுவதற்கும் சந்தர்ப்பமளித்தல்
- ✓ களி மண்ணைப் பயன்டுத்தி பண்டிகைக் காலங்களில் தயாரிக்கும் பலகாரங்களின் மாதிரிகளை ஆக்குதல், மனதுக்குப் பிடித்த புத்தாண்டு நிகழ்வுக்காட்சிகளை வரைதல்

## கருப்பொருள் : 6.0 நாம் காணும் வானம்

### தேர்ச்சிகள்

- ✓ வானம் பற்றிய அவதானிப்புக்களைப் பல்வேறு விதத்தில் அறிக்கைப் படுத்துவார்.
- ✓ வானத்திற் காணப்படும் பொருட்கள் தொடர்பாகத் தேடியறிந்து அறிக்கைப் படுத்துவார்.
- ✓ வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வானத்தில் ஏற்படும் மாற்றங்களை அவதானித்து அசைவுச் செயற்பாடுகளின் மூலம் அவற்றை வெளிக்காட்டுவார்.
- ✓ வானம் பற்றிய பாடல்களைப் பாடி மகிழ்வார்.
- ✓ வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களிலீடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ வானத்திற் காணப்படுபவை
- ✓ வானத்தில் காணக்கூடியன பற்றிய ஆக்கங்கள்
- ✓ இரவு, பகல் வானத்தை அவதானித்தலும், பகல் வானத்திற்கும் இரவு வானத்திற்கு மிடையிலான வித்தியாசங்களும்
- ✓ வானத்தில் காணக்கூடியவை தொடர்பான கதைகளும் பாடல்களும்
- ✓ வெளியைப் பயன்படுத்தும் அசைவுச் செயற்பாடுகளும் விளையாட்டுக்களும்
- ✓ வானில் காணக்கூடியவற்றை சித்திரங்களாக வரைதல்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ வானத்தை அவதானித்தலும் அங்கு காணப்படுபவை பற்றி அறிக்கைப் படுத்தலும் (வாய்மொழியாக , நடனம், போலச் செய்வதன் மூலம்)
- ✓ பகலிற் காணும் வானத்தையும் இரவிற் காணும் வானத்தையும் ஒப்பிட்டு அவதானிப்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இனங்கண்ட பண்பு களை சித்திரங்கள், பாடல்கள், நடனங்கள் மூலம் முன்வைத்தல்
- ✓ வானில் காணப்படுபவற்றை பல்வேறு பொருள்களைக் கொண்டு ஆக்கி முன்வைத்தல்
- ✓ வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## கருப்பொருள் : 7.0 நாம் உண்ணுபவையும் குடிப்பவையும்

### தேர்ச்சிகள்

- ✓ நாம் உண்ணும் உணவுகளைப் பொருத்தமான விதத்தில் வகைப்படுத்துவார்.
- ✓ உடல் வளர்ச்சி பற்றி அக்கறையுடன் செயற்படுவார்.
- ✓ குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட அளவில் உணவுகளையும் பானங்களையும் உட்கொள்வதில் கவனம் செலுத்துவார்.
- ✓ ஊட்டமிக்கதான வேளை உணவைத் தயாரிக்கும் விதத்தைப் பற்றி அக்கறை செலுத்துவார்.
- ✓ உடலின் சீரான வளர்ச்சிக்காகப் பொருத்தமான செயற்பாடுகளிலீடுபடுவார்.
- ✓ உணவும் சுகாதாரமும் தொடர்பான பழக்கவழக்கங்களை எடுத்துக்கூறும் பாடல், ஆடல்களில் ஈடுபடுவார்.
- ✓ நல்வாழ்விற்கான சுகாதாரப் பழக்கவழக்கங்களை வெளிக்காட்டுவார்.
- ✓ பல்வேறு பொருட்களை பயன்படுத்தி உணவுப் பொருள்கள் தொடர்பான ஆக்கங்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பிரதானமாக தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றிலிருந்தே நாம் எமது உணவைப் பெறுகின்றோம்
- ✓ வளர்ச்சிக்காகப் போதிய அளவு உணவை உட்கொள்ளல் அவசியம்
- ✓ உணவைத் தயாரிக்கும்போது மேற்கொள்ளும் பல்வேறு செயல்கள், அவற்றுள் ஒன்றினைச் செய்து பார்த்து அனுபவம் பெறுதல்
- ✓ உணவு தயாரிக்கும்போதும் உட்கொள்ளும்போதும் சுத்தம் பேணுவதன் முக்கியத்துவம்
- ✓ உணவை உட்கொள்ளும் போது பற்களினால் ஆற்றப்படும் கருமங்களும், பற்களைப் பாதுகாப்பதற்குரிய பழக்கங்களும்
- ✓ உணவு உட்கொள்வதுடன் தொடர்புடைய பாரம்பரியப் பழக்க வழக்கங்களும், அவற்றைப் பின்பற்றி நடக்கும் பழக்கமும் அதன் முக்கியத்துவமும்
- ✓ உணவு உட்கொள்வதன் முக்கியத்துவமும் சுத்தமான நீரைப் பருகுவதன் முக்கியத்துவமும்
- ✓ உணவு, சுகாதாரப் பழக்கங்கள் தொடர்பான பாடல்கள், கதைகள், நாடகங்கள்
- ✓ பல்வேறு பொருட்களைப் பயன்படுத்தி உணவுப் பொருள்கள் தொடர்பான ஆக்கங்கள்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ உணவிலும் பானங்களிலும் அடங்குபவை மரஞ்செடி கொடிகளிலிருந்தும், விலங்குகளிலிருந்தும் கிடைப்பவை என்பதனை அனுபவம் மூலம் அறிவதற்காகச் செயற்பாடுகளிலீடுபடல்
- ✓ தனது உடம்பின் வளர்ச்சி பற்றிய அனுபவங்களைக் கலந்துரையாடல் மூலமும் செயற்பாடுகளின் மூலமும் பெறுதல்
- ✓ உணவைத் தயாரிக்கும்போது பின்பற்ற வேண்டிய நற்பழக்க வழக்கங்களையும் சுத்தத்தை பேணுவதன் முக்கியத்துவத்தையும் காட்சிப்படுத்துவதற்காக உணவு வேளையொன்றைத் தயாரிக்க வாய்ப்பேற்படுத்தல்

  ***எடுத்துக்காட்டு:*** வேளை உணவிற்காக மரக்கறிகள்,கீரை வறுவல், பழச் சலாது, பழப்பானம் தயாரித்தல்
- ✓ பற்களினால் ஆற்றப்படும் பணிகளை இனங்காணல், பற்களைப் பாதுகாப்பதற்கான பழக்க வழக்கங்கள் பற்றிய நேரடி அனுபவங்களைப் பெறல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ சுகாதாரப் பழக்க வழக்கங்களை விளக்கிக் காட்டும் நாடகமொன்றை நடித்தல், பாடல்களைப் பாடுதலும் ஆடுதலும்
- ✓ பல்வேறு விதமான பொருட்களை உபயோகித்து பழங்கள், மரக்கறி வகைளின் மாதிரியுருக்களை வடிவமைத்தல். முகமூடிகளை ஆக்குதல்
- ✓ உடற் பயிற்சிக்குப் பொருத்தமான சில விளையாட்டுக்களில் ஈடுபடல்

## கருப்பொருள் : 8.0 தகவல்கள் பெறும் முறைகள்

### தேர்ச்சிகள்

- ✓ தனதும் தனக்கு நெருக்கமானவர்களினதும் தகவல்களை மரியாதையுடன் கூறுவார்.
- ✓ ஏனையோரின் தகவல்களை மரியாதையுடன் செவிமடுத்துத் துலங்குவார்.
- ✓ மரியாதையுடனும் நட்புடனும் கலந்துரையாடுவார்.
- ✓ வெவ்வேறு வேலைகளின் போது ஏனையோருடன் மரியாதையாகச் செயற்பாடு களிலீடுபடுவார்.
- ✓ தாம் கண்டவற்றுள், கேட்டவற்றுள் ஒன்றை அங்க அசைவுகளுடன் முன்வைப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### உள்ளடக்கம்

- ✓ தன்னைப் பற்றிய தகவல்களை மற்றொருவரிடம் கூறுதல்
- ✓ மற்றொருவருடைய தகவல்களைப் பெறுவதற்காக வினாவுதல்
- ✓ பாடசாலை பற்றிய தகவல்களை மற்றொருவரிடம் விவரித்துக் கூறல்
- ✓ தகவல்கள் கிடைக்கும் முறைகள்
- ✓ ஒரு தகவலை அங்க அசைவுகளுடன் முன்வைத்தல்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ தன்னைப் பற்றிய தகவல்களைக் கூறுவதற்கும், மற்றொருவரிடமிருந்து தகவல் களை வினாவிப் பெறுவதற்கும், செயல்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ✓ கண்ட அல்லது கேட்ட ஏதாவதொன்றை அங்க அசைவுகளுடன் முன்வைத்தல்
- ✓ தகவல்கள் கிடைக்கும் வெவ்வேறு வழிகளைப் பற்றிக் கண்டறிதல், பாடசாலை யில் தகவல் வழங்கும் பல்வேறு முறைகளை அவதானித்தலும் அவற்றை அறிக்கைப்படுத்தலும்
- ✓ தமது அவதானிப்புக்களின் உதவியுடன் பெற்ற தகவல்கள் குறித்து சுதந்திர மாகத் தனது கருத்துக்களை வெளியிடல், சித்திரங்கள் மூலம் கருத்துக்களை வெளியிடல்

## கருப்பொருள் : 9.0 சுற்றாடலில் நிகழும் மாற்றங்கள்

### தேர்ச்சிகள்

- ✓ தனது அயற் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைப்பதில் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பாடசாலைக்கு அயலிலுள்ள இயற்கைச் சுற்றாடலின் வேறுபாடுகளை அவதானித்து, அதன் அழகினைப் பேணுவதில் பங்களிப்பார்.
- ✓ சூழலின் பல்வகைமையையும் அழகையும் பாடல்கள், அசைவுகள், சித்திரங்கள், குறுநாடகங்கள் மூலம் வெளிப்படுத்துவார்.
- ✓ வெய்யில், மழை, காற்று ஆகியன தொடர்பாகச் சுற்றாடலில் நடைபெறும் மாற்றங்களை அவதானித்துப் பொருத்தமான விதத்தில் அறிக்கைப் படுத்துவார்.

- ✓ இயற்கை சூழலில் நிகழும் மாற்றங்கள், திடீரென ஏற்படும் நிலைமைகள் தொடர்பாக அவதானமாகச் செயற்படுவார்.
- ✓ மழை, வெயில், காற்று ஏற்படும் சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக்கூடிய எளிமையான ஆக்கங்களைச் செய்வார்.

## உள்ளடக்கம்

- ✓ தனது சூழலின் சுத்தமும் ஒழுங்கும்
- ✓ பாடசாலையைச் சூழவுள்ள மரஞ்செடிகொடிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள்
- ✓ காற்று காரணமாகச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள்
- ✓ சூரிய ஒளிபடுவதால் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள்
- ✓ மழை நாட்களில் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள்
- ✓ சுற்றாடலில் காற்று, மழை, வெயில் போன்றவற்றால் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய பாடல் போன்றவற்றைப் பாடுதல், நடித்தல், கதை கூறல்
- ✓ சுற்றாடலின் மாற்றங்களை வெளிக்காட்டும் ஆக்கங்கள்

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ தமது அயற் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் பேணுவதற்குச் செய்யக் கூடியவை பற்றிக் கலந்துரையாடல்ளூ தம்மால் செய்யக்கூடியவற்றுக்குப் பங்களிப்புச் செய்தல்
- ✓ பாடசாலைத் தோட்டத்தில் மரஞ்செடிகொடிகள் உள்ள இடமொன்றை தேர்ந் தெடுத்து அவதானித்துக் கண்ட தகவல்களைச் சித்திரம், பாடல், அசைவு, நடனம் என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தல்
- ✓ மழையினால் ஏற்படும் சூழல் மாற்றங்களை அவதானித்தல். அவதானிப்புக்களை வாய்மொழி மூலமாகவும், பாடல்கள், ஆடல், சித்திரங்கள் மூலம் வெளிப் படுத்தல்
- ✓ காற்றினால் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அவதானித்தல்ளூ காற்று சார்ந்த எளிமையான செயற்பாடுகளில் ஈடுபடுதல்

  ***எடுத்துக்காட்டு:*** இலேசான பொருட்களை காற்றில் பறக்கச் செய்தல்
  - பஞ்சு, பலூன் போன்றவை
- ✓ காற்றின் தொழிற்பாட்டைக் குறிக்கும் பாடல், ஆடல்கள்
- ✓ காற்று மற்றும் ஏனைய திடீர் இயற்கை நிகழ்வுகளால் ஏற்படத்தக்க விபத்துக்கள் குறித்த அனுபவங்களைக் கலந்துரையாடலும் அவை பற்றிய விழிப்புப்பெறலும்
- ✓ இயற்கைக் காரணிகளினால் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களைக் கூறும் குறுநாடகங்கள்
- ✓ அசைவு தொடர்பான தசைநார் விருத்திக்குப் பொருத்தமான செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ✓ வெயிலினால் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், சூரிய ஒளியின் பயன்கள் ஆகியன பற்றிக் கலந்துரையாடலும் செயற்பாடுகள் சிலவற்றைச் செய்து பார்த்தலும்

# கருப்பொருள் : 10.0 விருப்பும் விருப்பமின்மையும்

## தேர்ச்சிகள்

- ✓ விருப்புக்குரியதல்லாததாக இருந்த இடமொன்றை விருப்புக்குரிய ஓர் இடமாக மாற்றுவதில் பங்களிப்புச் செய்வார்.
- ✓ ஏனையோர் விரும்பாத நடத்தைகளைத் தவிர்த்துச் செயற்படுவார்.
- ✓ நாம் விரும்பாத போதிலும் நாம் முகங்கொடுக்க நேரிடத்தக்க எதிர்பாராத நிகழ்வுகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் என ஆலோசனைகளை முன்வைப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ பெரும்பாலானோர் விரும்புகின்ற விளையாட்டுக்களிலும் ஆடல், பாடல்களிலும் தாமும் சேர்ந்து ஈடுபடுவார்.
- ✓ தாம் விரும்பும் ஆக்கமொன்றைத் தாம் விரும்பிய ஊடகத்தைப் பயன்படுத்திச் செய்ய முன்வருவார்.

### உள்ளடக்கம்

- ✓ சூழலில் உள்ள எமது விருப்புக்குரிய விருப்புக்குரியவையல்லாத இடங்களை அவதானித்தல்
- ✓ சூழலிலுள்ள விருப்புக்குரியதல்லாத இடமொன்றை விருப்புக்குரிய ஓர் இடமாக மாற்றுவதற்குச் செய்ய வேண்டியவை
- ✓ மனிதரிடத்தேயுள்ள, நாம் விரும்பாத நடத்தைகளை இனங்கண்டு அவ்வாறான நடத்தைகளைத் தவிர்த்துக் கொள்ள நாம் செய்ய வேண்டியவை
- ✓ தாம் ஏனையோரால் விரும்பப்படும் ஒருவராவதற்கு தம்மிடத்தே ஏற்படுத்திக் கொள்ள வேண்டியனவும், வளர்த்துக் கொள்ள வேண்டியனவுமான பழக்கங் களும் இல்லாதொழிக்க வேண்டிய பழக்கங்களும்
- ✓ பாடசாலையில் இடம்பெறும் நாம் விரும்பாத நிகழ்வுகள் (விபத்துக்கள்,சூழல் மாசு போன்றன) அவ்வாறான நிகழ்வுகளைத் தடுப்பதற்கும் அவற்றிலிருந்து விலகி இருப்பதற்கும், எம்மைப் பாதுகாப்பதற்கும் நாம் செய்ய வேண்டியவை
- ✓ தமக்கு விருப்பமான அனுபவமொன்றை/நிகழ்வொன்றைச் சித்திரமாக வரைதல்
- ✓ தமக்கு விருப்பமான ஆடலொன்றை/கதையொன்றை/போலச்செய்து காட்ட லொன்றை முன்வைத்தல்
- ✓ விருப்பமான விளையாட்டுக்கள் சிலவற்றிலீடுபடல்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ சூழலிலுள்ள விருப்புக்குரியதல்லாத இடமொன்று ஏன் அவ்வாறான நிலைக் குள்ளாகியுள்ளது எனக் கலந்துரையாடி அந்த இடத்தினை விருப்புக்குரிய இடமாக மற்றுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல்
- ✓ வகுப்பு மாணவர் நன்கு இரசிக்கக்கூடியனவும் விரும்பக்கூடியனவுமான விளையாட்டுக்கள், பாடல்கள், பாத்திரமேற்று நடித்தல், சித்திரங்கள், வேறு ஆக்கங்கள் ஆகியவற்றிலீடுபடுதல்
- ✓ அயற் சூழலில் இடம்பெறும் விருப்புக்குரியனவல்லாத நிகழ்வுகளை (விபத்துக் கள், இயற்கை அனர்த்தங்கள், நோய்கள்) பற்றிய தகவல்களைச் சேகரித்தலும் அவற்றை தவிர்த்துக்கொள்ள எடுக்கக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றிக் கலந்துரையாடலும்

## கருப்பொருள் : 11.0 எமக்குத் தேவையானவை கிடைக்கும் விதம்

### தேர்ச்சிகள்

- ✓ எமக்குத் தேவையானவற்றைப் பெற்றுத் தருவதற்காகப் பெற்றோரும் மூத்தோரும் செயற்படும் விதத்தை மதிப்பார்ளூ அவ்வாறு கிடைப்பவற்றைச் சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- ✓ எமக்கு அன்றாட உணவுக்குத் தேவைப்படுகின்றவற்றுள் இயலுமானவற்றை வீட்டுத் தோட்டத்திலேயே உற்பத்தி செய்து கொள்வதில் பங்குகொள்வார்.
- ✓ நகரத்தின் அல்லது கிராமத்தின் சந்தை பற்றிய அனுபவங்களைக் கூறுவார்.
- ✓ சந்தை நடவடிக்கைகளைப் பாத்திரமேற்று நடித்துக்காட்டுவார்.
- ✓ வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்திப் பழங்கள், காய்கறி வகைகளின் மாதிரிகளை அமைப்பார்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ பலவகை உணவுப் பொருட்கள் பற்றியும், சந்தையிலுள்ளோர் பற்றியும் ஆடல், பாடல்களில் ஈடுபடுவார்.
- ✓ காய்கறிகள், பழவகைகளின் பெயர்களைப் பயன்படுத்தி, களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

## உள்ளடக்கம்

- ✓ எமக்குத் தேவையானவற்றைத் தருவதற்காகத் தாய், தந்தை, மூத்தோர் செயற்படும் விதம்
- ✓ பாடசாலையிலும் வீட்டிலும் எமக்குத் தேவையானவை கிடைக்கும் விதம்
- ✓ நகரச் சந்தையில் அல்லது கிராமச் சந்தையில் நடைபெறுபவை
- ✓ சந்தையில் அனுபவங்கள் பெறுதலும் அவற்றை அறிக்கைப்படுத்தலும் (வாய்மொழியாக, ஆடல், சித்திரம் மூலம்)
- ✓ நாம் உபயோகிப்பவற்றை வீணாக்காதிருத்தல் போன்ற நல்ல பழக்கங்கள்
- ✓ காய்கறிகள், பழவகைகளின் பெயர்களைக் கொண்டு விளையாடத்தக்க விளையாட்டுக்கள்

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ தரம் ஒன்றின் மாணவர்களுக்கு அன்றாட வேலைகளுக்காகத் தேவைப்படுபவை எவை என மாணவருடனான உரையாடலின் மூலம் இனங்காணல்ளூ அனுபவங் களைப் பெறத் தேவையான செயற்பாடுகளிலீடுபடுதல்
- ✓ கிராம அல்லது நகர சந்தையொன்றை அவதானிக்கச் செல்லல், அவதானிப்பின் மூலம் பெறும் தகவல்களைப் பல்வேறு முறைகளில் அறிக்கைப்படுத்தல் (வாய் மூலமாக, ஆடல் மூலமாக, போலச் செய்தல் மூலமாக, பாடல், சித்திரங்கள், ஆக்கங்கள் மூலமாக)
- ✓ காய்கறிகள், பழவகைகளின் பெயர்களைக் கொண்டு விளையாட்டுக்களில் ஈடுபடல்
- ✓ வகுப்பு மட்டத்தில் அல்லது பாடசாலை மட்டத்தில் சந்தையொன்றை ஒழுங்கு செய்தல்

## கருப்பொருள் : 12.0 போக்குவரத்து

## தேர்ச்சிகள்

- ✓ சந்தர்ப்பத்திற்கு ஏற்ற சரியான மெய்ந்நிலைகளை அனுசரித்துப் பயணஞ் செய்வார்.
- ✓ நாம் பாடசாலைக்கு வந்துபோகும் விதம், மனிதர்கள் போக்குவரத்து செய்யும் விதம் தொடர்பாகத் தேடி அறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ போக்குவரத்தின் போது ஏனையோரிடமிருந்து கிடைக்கும் உதவிகளை மதித்து, இயன்றவரை ஏனையோருக்கு உதவுவார்.
- ✓ போக்குவரத்து செய்யும் முறைகளைப் பாடி, ஆடி, அபிநயத்துக் காட்டுவார்.
- ✓ போக்குவரத்தின் போது தனது பாதுகாப்புப் பற்றிக் கவனம் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ விளையாட்டுக்களிலீடுபடுவதோடு, சமநிலையைப் பேணுவார்.
- ✓ பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி தனது அனுபவங்களை ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.

## உள்ளடக்கம்

- ✓ மாணவர்கள், ஆசிரியர்கள்,ஏனையோர் பாடசாலைக்கு வரும்போகும் விதம்
- ✓ கால் நடையாகவும், பல்வேறு பொருட்களை தூக்கிக் கொண்டும் பல்வேறு வாகனங்களிலும் போக்குவரத்து செய்யும் முறைகள்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ போக்குவரத்திற்காக மனிதர் பயன்படுத்தும் வெவ்வேறு வகை வாகனங்களின் மாதிரியுருக்களை ஆக்குதல்
- ✓ நடந்து செல்லும் மெய்ந்நிலைகள், நிற்கும் மெய்ந்நிலைகள்
- ✓ பாதையில் பயணஞ் செய்யவேண்டிய விதம், பயணஞ் செய்யும் போது நிகழக்கூடிய விபத்துக்களும் பாதுகாப்புப் பழக்க வழக்கங்களும்
- ✓ போக்குவரத்து தொடர்பான பாடல்கள், ஆடல்கள், கதைகள், மற்றும் போலச் செய்தல்
- ✓ சமநிலையைப் பேணக்கூடிய விளையாட்டுக்கள்

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ போக்குவரத்தின் போது பேண வேண்டிய மெய்ந்நிலைகளை இனங்காண்பதற் காகச் செயல்முறை செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ✓ நிற்றல், அமர்தல், சமநிலையாக நடத்தல் போன்றவற்றின் சரியான மெய்ந்நிலை களைப் பழகிக் கொள்வதற்கான செய்முறைச் செயற்பாடுகள்
- ✓ மாணவர்கள் பாடசாலைக்கு வரும் போகும் விதம் பற்றி உரையாடுதல்,அது தொடர்பான பாடல்கள், ஆடல்கள், பங்கேற்று நடித்தல்களை முன்வைத்தல்
- ✓ போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வெவ்வேறு வாகன வகைகளை அவதானித்தல். படங்கள், சித்திரங்களின் துணையுடன் இனங்காணத்தக்க செயற்பாடுகள்ளூ அவற்றை வெவ்வேறு முறைகளில் அறிக்கைப்படுத்தல் (வாய்மொழி மூலம், பாடங்கள், சித்திரங்கள், வரைபுகள், ஆடல், பாடல்கள் மூலம்)
- ✓ போக்குவரத்தின் போது தமது பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளல், விபத்துக் களைத் தவிர்க்கத்தக்க விதம் பற்றிய செயன்முறைத் தொழிற்பாடுகளில் ஈடுபடல்
- ✓ வெவ்வேறு வாகன வகைகள் பயணஞ் செய்யும் விதத்தையும் அவற்றின் ஒலிகளையும் போலச் செய்து விளையாடத்தக்க விளையாட்டுக்களிலும் சமநிலையைப் பேணத்தக்க விளையாட்டுகளிலும் ஈடுபட வாய்ப்பளித்தல்

## கருப்பொருள் : 13.0 ஒளியுடன்(வெளிச்சத்துடன்) விளையாட்டு

## தேர்ச்சிகள்

- ✓ யாதேனுமொன்றை நாம் காண்பதற்காக வெளிச்சம் (ஒளி), கண்ணின் பார்வைத் திறன் ஆகிய இரண்டும் முக்கியமானவை என்பதை விளங்கிச் செயற்படுவார்.
- ✓ கண்ணின் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெளிச்சத்தை வெளிவிடும் ஒளி முதல்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார். பல்வேறு விதத்தில் அறிக்கைப்படுத்துவார்.
- ✓ விளையாட்டுக்களில் ஈடுபட்டு நிழற்கோல ஆக்கங்களைச் செய்வார்.
- ✓ வெளிச்சம் தொடர்பான பாடல்களைப் பாடி ஆடுவார்.

## உள்ளடக்கம்

- ✓ யாதேனுமொன்றைக் காண்பதற்கு வெளிச்சம், கண்கள் ஆகியவை மிகவும் அவசியமானவை
- ✓ கண்களைப் பாதுகாத்துக்கொள்வதன் மிக முக்கியத்துவம்
- ✓ நிழல்களைக் கொண்டு செய்யப்படும் பல்வேறு ஆக்கங்கள்
- ✓ சூரிய வெளிச்சம் தவிர, வெளிச்சத்தைப் பெறத்தக்க வேறு முறைகள்
- ✓ முகம் பார்க்கும் கண்ணாடியினால் (தளவாடியினால்) ஒளியை வெவ்வேறு பக்கங்களுக்குத் திருப்பியனுப்புதலும், அது சார்ந்த விளையாட்டுக்களும்
- ✓ நிற வெளிச்சம் சார்ந்த வெவ்வேறு ஆக்கங்கள்
- ✓ ஒளியுடன் தொடர்புடைய பொருட்கள் பிராணிகள் தொடர்பாக எழுதப் பட்டுள்ள பாடல்களைப்பாடி ஆடுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

## அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ யாதேனுமொன்றைக் காண்பதற்கு வெளிச்சம் தேவை என்பது பற்றி அறிவூட்டம் பெறலும் அது தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடலும்
- ✓ முகம் பார்க்கும் கண்ணாடியையும் ஒளியையும் பயன்படுத்தி வெளிச்சத்தின் ஒளியின் திசையை மாற்ற முடியும் என்பது பற்றிய அனுபவங்களைப் பெறுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடல்
- ✓ இயற்கையான வெளிச்சம் சூரியனில் இருந்து கிடைக்கின்றது. பல்வேறு வெளிச்சங்கள் தொடர்பாக மாணவர் பெறும் அனுபவங்கள் பற்றிய கலந்துரையாடல்
- ✓ வெளிச்சம் தொடர்பான பாடல்களைத் தாளத்துடன் பாடுதலும் அதற்கேற்ப ஆடுதலும்
- ✓ ஒளியையும் வெளியையும் பயன்படுத்திச் செய்யும் நிழல் தொடர்பான சில விளையாட்டுக்களில் ஈடுபடல்
- ✓ நிழல்களையும் வெவ்வேறு நிற வெளிச்சத்தையும் பயன்படுத்தி வெவ்வேறு ஆக்கங்கள் புரிதல்

## கருப்பொருள் : 14.0 மனிதர் வேலைசெய்யும் இடங்கள்

## தேர்ச்சிகள்

- ✓ அயற்சூழலில் மனிதர் வேலை செய்யும் இடங்கள்,அவர்கள் தமது பாதுகாப்பைப் பேணும் விதம் ஆகியன தொடர்பான தகவல்களைத் தேடி அறிக்கைப்படுத்துவார்.
- ✓ வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுவோர், பயன்படுத்தும் உபகரணங்கள், கருவிகள், ஆடையணிகள், அவர்கள் செய்யும் வேலைகள் அடங்கும் செயல்கள், அவர்கள் ஓய்வைக் கழிக்கும் விதம் ஆகியவற்றைப் பற்றி கவனம் செலுத்திச் செயற்படுவார்.
- ✓ வெவ்வேறு வேலைகளில் ஈடுபடும் மனிதர்களின் சேவைகளால் எமக்குக் கிடைக்கும் பயன்களை மதித்து அவர்களுக்கு மதிப்பளித்துச் செயற்படுவார்.
- ✓ வேலைகள் செய்யப்படும் இடங்களுடன் தொடர்புடைய இடம்பெறும் நிகழ்வுகள், சம்பவங்கள், அவற்றில் இடம்பெறும் பாத்திரங்கள் போன்றவற்றைப் பாடல்கள், நடனங்களாக முன்வைப்பார்.
- ✓ மனிதர்கள் வேலை செய்யும் இடங்களுள் தமது மனதைக் கவர்ந்த சந்தர்ப்பங்களைச் சித்திரமாக வரைவார்.
- ✓ மனிதர் வேலை செய்யும் இடங்களில் காணப்படும் உபகரணங்களின் மாதிரிகளை ஆக்குவார்.

## உள்ளடக்கம்

- ✓ அயற் சூழலில் காணப்படும் தொழிற்சாலை/ பண்ணை/ தச்சுத் தொழிலகம்/ விலங்குப்பண்ணை, மீன்பிடிக்கும் இடம்... போன்ற இடங்களில் மனிதர் செய்யும் வெவ்வேறு வேலைகள்
- ✓ வெவ்வேறு வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் / உபகரணங்கள்
- ✓ வேலைசெய்யும் ஓர் இடம் தொடர்பான தகவல்கள் (அங்கு உற்பத்தி செய்யப்படுபவை, வேலை செய்வோரின் ஆடையணிகள், உணவு, பாதுகாப்பு போன்றவை)
- ✓ வேலை செய்வோர் களைப்பைப் போக்கிக் கொள்வதற்காகப் பாடும் பாடல்கள்
- ✓ வேலை செய்யும் விதத்தை எடுத்துக்கூறும் பாடல்களும் ஆடல்களும், அங்க அசைவுகளும்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ அயற்சூழலில் வேலைசெய்யப்படும் ஓர் இடத்தை அவதானித்தல். அவ் விடத்தில் நிகழுபவை பற்றிய தகவல்களைச்சேகரித்தலும் வெவ்வேறு விதமாக அறிக்கைப்படுத்தலும்
- ✓ வேலை செய்வோரின் உணவு, வேலையில் ஈடுபடுவதற்கான ஆயத்தம், பொறுப்புக்கள் ஆகியவற்றை அவதானித்து அனுபவம் பெறல்
- ✓ வேலை செய்யும் இடத்தை அவதானித்துப் பெற்ற தகவல்களை வகிபாகமேற்று நடித்தல், பாடுதல், வரைதல் மூலம் வெளிக்காட்ட வாய்ப்பளித்தல்
- ✓ கூட்டாக வேலை செய்வதன் முக்கியத்துவம், அதனுடன் தொடர்புடைய கதைகள், செவிவழிக்கதைகள், பாடல்கள் ஆகியவற்றை முன்வைத்தல்

## கருப்பொருள் : 15.0 சுற்றாடலில் வேறுபட்ட இடங்கள்

### தேர்ச்சிகள்

- ✓ சூழலின் பல்வகைத் தன்மையை இனங்காண்பதற்காக, இலகுவான கையாண்டு பார்த்தல்களைச் செய்வார்.
- ✓ அயற்சூழலிலுள்ள சில இடங்களில் மரக்கன்றுகள் வளரும் விதத்தையும் அம்மரங்களில் வாழும் பிராணிகள் பற்றிய தகவல்களையும் அறிக்கைப்படுத்து வார்.
- ✓ சூழலிலிருந்து சேகரித்த வெவ்வேறு பொருட்களைக் கொண்டு ஆக்கங்களைச் செய்வார்.
- ✓ சூழலிலிருந்து சேகரித்த வெவ்வேறு பொருள்களினால் நிறங்களைத் தயாரித்து ஆக்கங்களை அழகுபடுத்துவார்.
- ✓ சூழலின் பல்வகைமையைக் காட்டும் வகையில் கொலாஜ், களி ஆகிய ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்களைச் செய்வார்.
- ✓ சூழலின் பல்வகைமையை இரசித்து ஆடல், பாடல், அங்க அசைவுகளில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ பாடசாலைத் தோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியை அவதானித்து பல்வேறு வடிவ இலைகள் உள்ள மரங்கள், பல்வேறு நிற வெவ்வேறு வடிவப்பூக்கள் உள்ள மரங்கள், நிறக் கற்கள், மணல் மண், சிறிய பிராணிகள் ... போன்றவை தொடர்பாகத் தேடி அறிதல்
- ✓ பாடசாலைத் தோட்டத்தில் அல்லது அயலில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு இடங்களுக்கு இடையிலான வேறுபாடுகள்
- ✓ நீர்ப்பாங்கான இடங்களில் நன்கு வளரும் விசேடமான தாவர வகைகளும் அவ்வாறான இடங்களில் வாழும் பிராணி வகைகளும்
- ✓ சூழலின் பல்வகைமையைக் கூறும் நாட்டார் பாடல்களைக் கேட்டலும் பாடுதலும் ஆடுதலும்
- ✓ அயற் சூழலில் வெவ்வேறு இடங்களில் இருந்து பெற்ற பொருள்களைக் கொண்டு பல்வேறு ஆக்கங்கள் புரிதல்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ அயற்சூழலின் பல்வகைமையை விளங்கிக்கொள்வதற்காக குறிப்பான சில இடங்களை அவதானித்தல்
- ✓ வெவ்வேறு இடங்களில் வளரும் தாவரங்களை அவதானித்தலும் தகவல்களை வெவ்வேறு விதமாக அறிக்கைப்படுத்தலும்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.

- ✓ சூழலின் பல்வகைமையை வெளிக்கொணரத்தக்க வகையில் அங்க அசைவுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- ✓ கொலாஜ், களிமண் ஊடகங்களைப் பயன்படுத்தி சூழற் பல்வகைமையை ஆக்குதல்
- ✓ சூழலில் இருந்து பெறும் பொருள்களைக் கொண்டு ஆக்கம் புரிதல்

## கருப்பொருள் : 16.0 எமது உதவி தேவைப்படுவோர்

### தேர்ச்சிகள்

- ✓ பாடசாலையிலும் வீட்டிலும் தமக்குத் தேவையான உதவிகளை பெறுவதற்கும் உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரிவதற்கும் முன்வருவார்.
- ✓ உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரியும் சந்தர்ப்பங்கள், நிகழ்வுகள் குறித்து உணர்வுடன் ஆடல்பாடல்களில் ஈடுபடுவார்.
- ✓ விசேட உதவி தேவைப்படுவோர் குறித்து பரிவுணர்வுடன் செயற்படுவார்.
- ✓ ஏனையோருக்கு உதவியவாறு கூட்டாக விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

### உள்ளடக்கம்

- ✓ அன்றாட வாழ்வில் ஏனையோரின் உதவியைப் பெறும் சந்தர்ப்பங்களும் ஏனையோருக்கு உதவி புரியும் சந்தர்ப்பங்களும்
- ✓ உதவி தேவைப்படுவோருக்கு உதவி புரியும் சந்தர்ப்பங்களை முன்வைத்தல்
- ✓ உதவி பெறும்போது பண்பாக நடந்துகொள்ளலும் உதவி புரிந்தோருக்கு நன்றி தெரிவித்தலும்
- ✓ விசேட உதவி தேவைப்படுவோரை இனங்காணல், அவ்வாறானோர் பயன் படுத்தும் பல்வேறு பொருள்கள், அல்லது சைகைகள் (ஊன்று கோல்கள், வெள்ளைப்பிரம்பு, கைத்தடி போன்ற)
- ✓ உதவி தேவைப்படுவோருக்கு உதவி செய்தல்
- ✓ உதவி தேவைப்படுவோருக்குத் தேவையான உபகரணங்களை ஆக்குதல்
- ✓ பிராணிகளுக்கும் மரஞ்செடிகொடிகளுக்கும் எமது உதவி தேவை என்பதை உணர்தல்
- ✓ அன்றாடப் பணிகளில் ஒவ்வொருவருக்கும் ஏனையோரின் உதவி தேவை என்பதைக் காட்டும் சம்பவங்கள் / கதைகள் / சந்தர்ப்பங்கள்
- ✓ ஏனையோருடன் ஒத்துழைத்து விளையாடும் விளையாட்டுக்கள்

### அணுகுமுறைகளும் செயற்பாடுகளும்

- ✓ அன்றாட வேலைகளின்போது ஏனையோரின் உதவியைப் பெறும் விதம் பற்றிய அனுபவங்கள் குறித்து உரையாடல்
- ✓ பாடசாலையிலும் வீட்டிலும் உதவி தேவைப்படும் சிலரை உரையாடலினூடாக இனங்காணல்
- ✓ பரஸ்பரம் உதவி பெறும் சந்தர்ப்பங்களை வெளிக்கொணரத்தக்கவாறான கதைகள் (நாட்டார் கதைகள், ஆக்கக் கதைகள்) நாடகங்கள்
- ✓ அன்றாடம் செய்யும் வேலைகளை போலச் செய்தலாக முன்வைத்தல், உதவி தேவைப்படுவோர் பயன்படுத்தத்தக்க உபகரணங்களை ஆக்கல்
- ✓ பிராணிகளுக்கும் மரஞ்செடிகொடிகளுக்கும் எமது உதவி தேவை என்பது வெளிக்காட்டப்படும் வகையில் ஆடல், பாடல்கள், கதைப்பாடல்களை முன்வைத்தல்
- ✓ பரஸ்பர ஒத்துழைப்புடன் விளையாடப்படும் விளையாட்டுக்களில் ஈடுபடுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved.